மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், இந்த மோயார் டிவிஷன் பகுதி மிகவும் கடுமையான பாறைகள் மிகுந்த மலைப் பகுதி என்பது. அந்தக் காரணத்தினால், வீடுகள் கட்டுவதற்கு வசதிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஒப்பந்தக்காரர்கள் வர மாட்டேன் என்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக, பெரு மழை, வெள்ளம் வந்த காரணத்தினால், வேலைகள் தடை பட்டு வந்திருக்கின்றன. இவைகளை யெல்லாம் மனதில்கொண்டு மிக விரைவில் வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்று துறைக்கு அரசாங்கம் அறிவுறுத்தியிருக்கின்றது.

திரு. கு. ரமணி ; தலைவர் அவர்களே, 1977லே கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டும், அங்கே வீடுகள் கட்ட முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணம், அந்த கான்ட்ராக்ட்காரர் வீடுகள் கட்டுவதற்கு மரம் தேவை என்று அரசினிடம் அனுமதி பெற்று, அந்த மரங்களை வேறு இடத்திற்கு கடத்திக் கொண்டு போய்விடுகிறார். அதுதான் காரணம். அதன்மீது நானும் அரசுக்கு ஒரு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறேன். அதனால்தான் தாமதம் ஏற்பட்டது என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படிப் பட்ட கான்ட்ராக்ட்காரர்களுக்குக் கொடுக்காமல், பி.டபிள்யூ.டி. மூலமாக வீடுகளைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருகின்ற தகவல் மிகவும் கடுமையானது. உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு உரியது. அதன்மீது அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

பத்திரிகைகளில் அரசு விளம்பரங்கள்.

*வினா எண். 46—திரு. கே. பன்னை சேதுராம் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு கொடுக்கும் பத்திரிகை விளம்பரங்களை தனியார் ஏஜெண்டுகள் மூலம் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுத்து வருகிறதா ?

(ஆ) அதனால் தனியார் கம்பெனிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு கமிஷன் தொகை எவ்வளவு ஆகிறது ?

(இ) அதை அரசே, நேரடியாக எடுத்து நடத்த திட்டம் ஏதாவது அரசின் ஆலோசனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) விளம்பர நிறுவனங்களுக்கு அரசு கமிஷன் தொகை எதுவும் கொடுப்பதில்லை.

(இ) இல்லை.

1980 பிப்ரவரி 5]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழக அரசு கொடுக்கும் பத்திரிகை விளம்பரங்கள் குறிப்பாக சில தனிபபட்ட பத்திரிகைகளுக்கு ஒதுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த நிலை இருக்குமானால், அதைத் தவிர்த்திட அரசு முன் வருமா? அது அன்னியில், தமிழக அரசு கொடுக்கும் பத்திரிகை விளம்பரங்களை அரசே ஏற்று நடத்த முன்வரவேண்டுமென்ற கோரிக்கைக்கு இணங்க, அந்தத் துறையை தானே மேற்கொண்டு, அதற்காகச் செலவாகின்ற பணத்தைக் குறைப்பதற்காக, ஏஜெண்டுகளுக்கு ஆகின்ற செலவுகளைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அதைப்போலவே, தமிழக அரசு கொடுக்கும் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்குச் செலவாகும் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

[முற்பகல் 9—20]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியின் முதல் பகுதிக்குக்கு தனியாக கேள்வி கேட்க வேண்டும். இறுதிப் பகுதிக்கும் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் கொடுக்க முடியும். இடையில் இருக்கும் பகுதி இந்தக் கேள்வியோடு தொடர்புடையது. இப்பொழுது ஏஜன்சி மூலம் கொடுப்பதால் அரசாங்கத்திற்கு அதிகமான எந்தச் செலவும் கிடையாது. அரசாங்கமே இந்த விளம்பரங்களைத் தயாரித்துக் கொடுக்கும் முறை இருந்தால் அதற்கான துறையை ஏற்படுத்த வேண்டும். அதற்கான அலுவலகத்தை நிர்வகிக்க வேண்டும். அதனால் அதிகச் செலவாகும் என்ற காரணத்தால் முன்னாலே இருந்த அரசுகள் அதைப் பரிசிலித்து இந்த முறையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தது. அதை இந்த அரசும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

திரு. க. மருதாசலம் : தமிழக அரசு எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் தந்து வருகின்றன. அதற்குரிய செலவு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினா திரு. கிட்டப்பா அவர்கள் கேட்ட கேள்வியையே மாண்புமிகு உறுப்பினர் திரு. மருதாசலம் கேட்கிறார்கள். தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் உறுப்பினர் கேட்ட கேள்வியையே இன்னொரு உறுப்பினர் கேட்டு அவையின் நேரத்தை வீணாக்கக் கூடாது.

திரு. மா. மணிமாறன் : அரசு ஏஜென்டை அமர்த்தி செய்தித்தாள்களுக்கு விளம்பரம் கொடுப்பதன் மூலம் அந்தப் பத்திரிகைகள் கொடுக்கும் கமிஷனை அந்த ஏஜன்சிகள் பெற்றுக் கொள்கிறார்கள். ஆகவே, அரசே நேரடியாகப் பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டு இந்த விளம்பரங்களைக் கொடுக்க முன்வருமா ?

[1980 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஏஜன்சிகளுக்குக் கமிஷன் கொடுப்பது என்பது ஒன்று. அது அகில இந்தியாவிலும் ஏற்றுக் கொண்டிருக்கும் முறை. அந்தக் கமிஷனுக்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை. அரசாங்கமே நேரடியாக அந்தப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுத்தால் அந்தக் கமிஷனை அரசாங்கத்திற்குத் தர மாட்டார்கள். கமிஷனை ஏஜன்சிக்கு மட்டும் கொடுக்க வேண்டுமென்பது அவர்கள் வைத்திருக்கும் முறை. ஏஜன்சிகளுக்குத்தான் அவர்கள் கமிஷன் தருவார்கள். நமக்கு தரமாட்டார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த ஏஜன்சிகள் தமிழ்நாடு பூராவும் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள். மாவட்ட வாரியாக எவ்வளவு? பெரிய பெரிய பத்திரிகைகளுக்கு மாத்திரம் ஏஜன்சி முறையா அல்லது சிறு சிறு பத்திரிகைகளுக்கும் அந்த முறை உண்டா ? எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஏஜென்சிகள் என்பது இன்ன குறிப்பிட்ட பத்திரிகைகளுக்கு என்று அல்ல. அவர்கள் இதை ஒரு தொழிலாக வைத்துக் கொண்டு நடத்துகிறார்கள். அந்த ஏஜென்சிகள் எல்லாப் பத்திரிகைகளுக்கும் விளம்பரத்தைக் கொடுப்பார்கள். பல பத்திரிகைகள் அவர்களைச் சில நிபந்தனைகளின் பேரில் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. சில அகில இந்திய விதிகளுக்குட்பட்டு அவர்களுக்கு கமிஷனைத் தருகிறார்கள். அந்தக் கமிஷனில் வித்தியாசங்கள் அவர்களுக்குள்ளாக இருக்கலாம். தனிப்பட்ட பத்திரிகைகளுக்கு ஏஜென்சி என்று கிடையாது.

திரு. சி. ஆறுமுகம் : நாட்டில் இடைத் தரகர்கள் வேண்டாமென்று நினைக்கிறபோது பத்திரிகைக்கு விளம்பரம் கொடுப்பதில் இடைத்தரகர்கள் அவசியமா ? அரசாங்கம் எதற்காக விளம்பரம் கொடுக்க வேண்டும் ? அரசாங்கம் வியாபாரமா செய்கிறது விளம்பரம் கொடுப்பதற்கு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இதிலே இடைத் தரகர்கள் என்ற பிரச்சினையே எழவில்லை. "ஏஜென்சி" என்பவர்கள் ஒரு காரியத்தைச் செய்கிறார்கள். அந்தப் பணிக்குரிய விகிதத்தை, ஊதியத்தை அவர்கள் ஓரிடத்திலிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். இரண்டாவது பகுதி, விளம்பரம் செய்வது முக்கியமா என்பது. இந்த அரசு வந்து இந்த விளம்பர முறையை உருவாக்கவில்லை. பரம்பரையாக நடந்து வரும் முறை. அதைத்தான் இந்த அரசும் பின்பற்றிக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து இது தேவை என்பது தெரிகிறது.